අධිකරණ, බන්ධනාගාර කටයුතු හා ආණ්ඩුක්‍රම
ව්‍යවස්ථා ප්‍රතිසංස්කරණ අමාත්‍යාංශය

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும்
அரசியலமைப்பு மறுசீரமைப்பு

Ministry of Justice, Prison Affairs and
Constitutional Reforms

රාජ්‍ය ගිණුම් පිළිබඳ කාරක සභාවේ පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා - අංක 290

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் – இல. 290

Series of Parliamentary Publications of the Committee of Public Accounts - No. 290

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම

பாராளுமன்றத்தின் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் சபாபீடத்தில் வைக்கப்பட்ட அறிக்கைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

Submission of observations of Hon. Minister and steps taken with regard to the reports Tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4)

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

அமைச்சு / திணைக்களத்தின் பெயர்	தலைப்பு
01. நீதி அமைச்சு	110
02. சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு	418
03. நீதிமன்ற நிருவாகத் திணைக்களம்	228
04. உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம்	234
05. கடன் நிவாரண சபை திணைக்களம்	231
06. அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்	233
07. சட்டவரைஞர் திணைக்களம்	230
08. சட்ட மாஅதிபர் திணைக்களம்	229
09. சட்ட ஆணைக்குழு திணைக்களம்	235
10. சிறைச்சாலைகள் திணைக்களம்	332
11. சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம்	326

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: **நீதி அமைச்சு -110**
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல. : 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை
முதலாம் பகுதி : 58.00	
நிலையான சொத்துக்கள் பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	தற்போது நிலையான சொத்துப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
தனிநபர் வேதனங்கள் ஆவணம்/தனிநபர் வேதன அட்டைகள் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	ஆளுக்குரிய சம்பளப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது. இதன் போது ஒவ்வொரு மாதமும் 20 ஆம் திகதிக்கு முன்னர் ஆட்களுக்குரிய சம்பளப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது.
கணக்காய்வு ஐயவினா ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	கணக்காய்வு வினாப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
அரச கணக்குத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட உரிய திகதிக்கு முன்னர் சிகாஸ் கணினித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை அத்தோடு மாதாந்த கணக்குச் சுருக்கங்கள் தயாரிக்கப்பட்டு அரச கணக்குத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கு அமைய மாதாந்த கணக்குப் பொழிப்பு தயார் செய்யப்பட்டு அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடம் உரிய திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்றது.
கிடைக்கின்ற காசோலைகள் , காசுக்கட்டளைகள் ஆகியவற்றிற்கான பதிவேடு கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	கிடைக்கின்ற காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளின் பதிவேடு சிராப்பரினால் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
பொருட் பதிவேடு கால அடிப்படையில் பூரணப்படுத்தப்பவில்லை.	தற்போது பொருட் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

நுகர்வுப் பொருட்கள் மீதான பதிவு நாளாந்த அடிப்படையில் பூரணப்படுத்தி பேணப்படவில்லை.	தற்போது நுகர்வுப் பொருட்களின் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
சேதங்கள் பற்றிய ஆவணம் கால அடிப்படையில் பராமரிக்கப்படவில்லை.	தற்போது இழப்புகள் பற்றிய பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
நிதி ஒழுங்கு விதிகள் 135 இன் பிரகாரம் நிறுவனத்திற்குள் நிதிசார் தத்துவங்கள் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.	நிதிப் பிரமாணம் 135 இற்கு அமைய நிறுவத்திற்குள் நிதி அதிகாரத்தை சாட்டுதல் செய்வது 2021.01.13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2021 நிதியாண்டிற்கு ஒன்லைன் தகவல் முகாமைத்துவ முறைமையின் முதலாவது பகுதியில் நிதி தத்துவங்களை சாட்டுதல் செய்வதன் கீழ் பக்க இலக்கம் 06 இல் நிதி தத்துவங்கள் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது
வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 ஆம் ஆண்டு செயற்திட்டம் 2015.09.22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட MNPEA/AAG/15 ஆம் இலக்க வழிகாட்டல்களுக்கு ஏற்ப தயார் செய்யப்பட்டுள்ளது. 2022 , 2023 மற்றும் 2024 செயற்திட்டங்கள் அரசாங்க நிதி சுற்றறிக்கை 20/2020 இற்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	2023 ஆம் ஆண்டு கணக்காய்வு வினாக்கள் 20 கிடைத்துள்ளதுடன் கணக்காய்வு வினாக்கள் 15 இற்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 05 கணக்காய்வு வினாக்களுக்கும் 02 மாதங்களுக்குள் பதிலளிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாத காலப் பகுதிக்குள் பதில் அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளார்கள்.
உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் தாமதம் இன்றி பதில் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி 1 இன் 11.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் நி.ஒ.756 (6) இன் பிரகாரம் பொருள் கணிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு குறித்த தினத்தில் உரிய அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படாமை.	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கைக்கு அமைய அமைச்சின் பொருட் கணிப்பீடு 2020 ஆம் ஆண்டு தாமதம் அடைந்த போதிலும் அடுத்து வரும் ஆண்டுகளில் உரிய காலப் பகுதிக்குள் பொருட் கணிப்பீடு மற்றும் ஏல விற்பனை மேற்கொள்ளும் பணிகளை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் , பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	
ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	குழும வாகனங்களுக்கு நாளாந்த பயண குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தற்போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	சகல வாகனங்களுக்கும் அரச இலச்சினையை பொறிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
நி.ஒ. 94 (1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது.	நி.பி. 94(1) இற்கமைய செலவுத் தலைப்புகள் செலவு விடயத்திற்கு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளின் வரையறைக்குள் மாத்திரம் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	**உயிரிழந்த அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் மீதி** • எல்.பீ.சி.பீ. சிறிவர்தன - ரூ. 250,838.00 ஆன தொகை அறிவிடப்பட்டுள்ளது.

	• எச்.ஆர்.என்.எம்.ஐ. நியங்கொட - ரூ. 220,103. 00 ஆன தொகை அறிவிடப்பட்டுள்ளது. • ஆர்.எம்.வீ. விஷ்வஜித் – ரூ. 189,177. 00 ஆன நிலுவைக் கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக உரிய அலுவலரின் மரண பணிக்கொடைக்கு தேவையான ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு வருவதுடன் மரணப் பணிக் கொடையை செலுத்தப்படுவதற்கு தங்கி வாழுவோரின் அறிக்கை பிரதேச அலுவலரிடம் சான்றுப் படுத்திக் கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் மரணப் பணிக் கொடையை தயார் செய்ய முடியாது உள்ளது. **ஓய்வு பெற்ற அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகை** • என்.பீ. கால்லகே – ரூ. 350,979.00 ஆன தொகை ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. • பீ.பி. தென்னகோன் - ரூ. 17,789. 00 ஆன தொகை ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. **சேவை இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் தொகை** • எம்.ஐ. பிரணாந்து – ரூ. 49,150.00 குறித்த நபருக்கு பதிவுத் தபால் மூலம் அறிவிக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலாளர் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கடன் நிலுவை தீர்க்கப்படவில்லை என்பதுடன் அதற்கமைய கடன் அறவிட்டுக் கொள்வதற்கு கெசல்வத்த பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் இது வரை முறைப்பாடு சம்பந்தமாக அழைப்பு விடுக்கப்படவில்லை. எனவே மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இது வரை கெசல்வத்த பொலிசார் பதிலளிக்கவில்லை. இதனையடுத்து கடனை அறிவிட்டுக் கொள்வதற்காக மொரட்டுவ பொலிஸ் நிலையத்திற்கும்

	கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு மீண்டும் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ள போதிலும் இது வரை பதில் கிடைக்கவில்லை. • பீ.வீ. குணவர்தன – ரூ. 162,215.00 ஆன கடன் நிலுவையை அறிவிட்டுக் கொள்ளத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய தகவல்கள் 2015.12.23 ஆம் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப் பட்டுள்ளதுடன் தற்போது இந்த அலுவலருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2024.01.08 ஆம் திகதி சாட்சிகளுக்கு ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. • ஜி.ஏ.சி. கமஆரச்சி – ரூ. 111,832.00 ஆன கடன் தொகை பிணையாளர்களிடம் அறிவிட்டுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. **பதவி வெறிதாக்கிய அலுவலர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடன் நிலுவைத் தொகை** • என்.ஜி. ஜே. சி. நாரங்கஸ்பிடிய – ரூ. 20,590. 00 ஆன தொகை அறவிட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. • எச்.எஸ்.சி. புஷ்ப குமார – ரூ. 121,392.00 ஆன கடன் தொகையை அறவிட்டுக் கொள்ளத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய தகவல்கள் 2017.10.30 ஆம் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முன் சட்ட கலந்துரையாடல் ஒன்று 2023.11.16 ஆம் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்தில் இடம்பெற்றது. எதிர்காலத்தில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. • எச்.ஏ.ஏ. சாமர – ரூ. 117 ,003.00 ஆன கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்ளத் தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

	உரிய தகவல்கள் 2017.10.30 ஆம் திகதி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.
காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொது வைப்புக் கணக்கின் காலவதியான வைப்புகள் தொடர்பில் நி.பி. 571 இற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
நி.ஒ 371 இன் பிரகாரம் , வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	நி.பி. 371 இற்கமைய வெளியிடப்பட்ட மணி குறித்த கட்டுநிதியானது குறித்த பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்த்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் பகுதி : 64.00	
பிரசைகள் /சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	பிரசைகள்/ சேவைப் பெறுநர் பிரகடனத்தை முறையாக தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இது அமுல்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் கண்காணிப்பு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான முறையியலை தயார் செய்துள்ளதுடன் எதிர்காலத்தில் இதனை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
நிறுவனத்தின் பிரசைகள் /சேவைபெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமானன முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	
ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	கடந்த ஆண்டில் செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திட வேண்டும் என சகல பிரிவுகளுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ள போதிலும் இது முறையாக இடம்பெற்றிருக்கவில்லை என்பதும் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	அமைச்சின் 2021 ஆம் நிதியாண்டுக்கான கணக்குகள் பற்றி முனைப்பழியுள்ள கருத்துரை வெளியிடப்பட்டுள்ளது.

2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 12.1 இன் பிரகாரம் , அதன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை.	2021 செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பல்வேறு சட்ட திருத்தங்களின் எண்ணிக்கை, மத்தியஸ்த சபைகளினால் பிணக்குகளை தீர்த்து வைப்பதன் விகிதம், நீதிமன்ற அலுவலர்களுக்கு நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சியாளர்களின் நிறைவு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை, நீதிமன்ற சாரா அலுவலர்களுக்கு நடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை, பயிற்சியளிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ள நீதிமன்றம் சாரா அலுவலர்களின் எண்ணிக்கை, சட்ட உதவி சேவை வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கையை மிகவும் தெளிவாக அளவிடக்கூடிய சுட்டிகள் இனங் காணப்பட்டுள்ளன.
பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள்/ கட்டளைகள் செயல்படுத்தப்படவில்லை.	அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் அமைச்சுக்கு வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது சிபாரிசுகள் இருக்கவில்லை என்பதுடன் 2021 நிதியாண்டுக்கு ஒன்லைன் தகவல் முகாமைத்துவ முறைமையின் இரண்டாம் பகுதியில் இலக்கம் 8 எனும் விடயத்தின் கீழ் அவ்வாறான கட்டளை அல்லது சிபாரிசு வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: சிறைச்சாலைகள் முகாமைத்துவம் மற்றும் சிறைக்ககைதிகள் புனர்வாழ்வளிப்பு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு **- 418**
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி : 81.00	
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	2021 ஆம் ஆண்டு தொடர்பாக 14 கணக்காய்வு வினாக்கள் கிடைத்திருப்பதுடன் அவற்றுள் 13 வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்பட்டுள்ளதுடன் 01 வினாவிற்கு மாத்திரம் இரண்டு மாதங்களுக்குள் பதிலளிக்கப்பட்டுள்ளது.
நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	உள்ளக கணக்காய்வு பணியாட்டொகுதி வெற்றிடம் காணப்படுகின்றமையால் உள்ளக கணக்காய்வு பிரிவு அப்போது காணப்பட்ட இராஜாங்க அமைச்சில் இயங்கி வராமையினால் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகளை உள்ளக கணக்காய்வு தலைமை அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு முடியவில்லை.
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒரு வருடத்திற்கு குறைந்தபட்சம் 2 கூட்டங்களையாவது நடத்தியிருக்கவில்லை.	
வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் , பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	இராஜாங்க அமைச்சு செயலிழந்துள்ளதுடன் அதன் சொத்துக்கள் தற்போது வேறு நிறுவனங்களுக்கு சாட்டுதல் செய்யப்பட்டிருக்கின்றன. எஞ்சியுள்ள சொத்துக்கள் நீதி அமைச்சிற்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய எதிர்காலத்தில் பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்படுகின்ற மிகை

	மற்றும் குறை பற்றிய சிபாரிசுகளை உரிய காலப் பகுதிக்குள் அமுல்படுத்துமாறு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.
அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை.	சகல வாகனங்களினதும் உரிமை தற்போது நீதி, சிறைச்சாலை அலுவல்கள், மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு சாட்டுதல் செய்யப்பட்டுள்ளன.
அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	எதிர்காலத்தில் சகல வாகனங்களிலும் அரச இலச்சினையை பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
வாகனமொன்று பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதத்திற்கும் குறைவான காலத்தினுள் விற்றொழிக்கப்படாமை.	காணப்பட்ட சிறைச்சாலை மறுசீரமைப்பு மற்றும் சிறைக்கைதி புனர்வாழ்வளிப்பு இராஜாங்க அமைச்சின் போக்குவரத்து நடவடிக்கைகளை இந்த அமைச்சுக்கு சாட்டுதல் செய்யும் போது போக்குவரத்து விடயம் சம்பந்தமான வாகனங்கள் இந்த அமைச்சுக்கு பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டன. அந்த சந்தர்ப்பத்தில் சேதமடைந்து 08 மாதங்களுக்கும் குறைவான காலப் பகுதியில் அகற்றப்படாதிருந்த ஒரு வாகனம் காணப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.
ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	அரசாங்க வாகன விபத்துக்கள் தொடர்பாக தற்போது நி.பி. 103, 104, 109 மற்றும் 110 இற்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	• ஏ.என்.ஏ. சமரநாயக்க - ரூ. 110,854.68 ஏ.என்.ஏ. சமரநாயக்க - ரூ. 110,854.68 ஆன நிலுவைக் கடனை அறவிட்டுக் கொள்வதற்கு அலுவலருக்கு எதிராக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2019.12.30 ஆம் திகதி எஸ்கிஸி தத்துவங்களை அமுல்படுத்துவதற்கு சரியான முகவரி சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. • ஜே.எம்.எஸ். குமாரசிறி - ரூ. 118,465.00 ஆன நிலுவைக் கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு எதிராக கங்கொட மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2023.08.05 ஆம் திகதிய அவர் வசிக்கும் பிரதேசத்திலுள்ள கிராம அலுவலர் ஊடாக அழைப்பாணை விடுக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது வழக்கின் நிலைமை பற்றி சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளது.
நி.ஒ 371 இன் பிரகாரம், வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	வேலைப் பழு அதிகமாக உள்ளதன் காரணமாக உரிய காலப் பகுதிக்குள் இடைக் கட்டுநிதிகளை தீர்த்து வைக்க முடியவில்லை.

இரண்டாம் பகுதி : 77.00	
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டடிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு %ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. 50	நாட்டில் நிலவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்க முடியவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் சகல அலுவலர்களையும் உள்ளடக்கும் வகையில் பயிற்சி வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	இராஜாங்க அமைச்சின் 2021 நிதியாண்டுக்கான கணக்குகள் பற்றி முனைப்பழியுள்ள கருத்து வெளியிடப்பட்டுள்ளது.
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவைக் கடன் மீதியான ஏ.என்.ஏ. சமரநாயக்கவின் ரூ. 110,854.68 ஆன தொகை மற்றும் ஜே.எம்.எஸ். குமாரசிறியின் ரூ. 118,465.00 ஆன தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு மேலே குறிப்பிட்டவாறு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: நீதிமன்ற நிருவாகத் திணைக்களம்- 228
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி : 81.00	
2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம் , இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை.	2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய சம்பளங்களை தயார் செய்யும் கணினி மென்பொருள் தொடர்பில் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச் சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மேல் நீதிமன்றங்களுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 ஆம் ஆண்டின் செயற்றிட்டம் 2015.09.22 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட MNPEA/AAG/15 ஆம் இலக்க

	வழிகாட்டல் தொகுப்புக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன. 2022, 2023 மற்றும் 2024 செயற்றிட்டங்கள அரச நிதி சுற்றறிக்கை 20/2020 இற்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன.
கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை.	எதிர்காலத்தில் தாமதமின்றி பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும்
உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன.	
அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	எதிர்காலத்தில் சகல வாகனங்களுக்கும் அரச இலச்சினையை பொறிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வருகின்ற நிலுவைக் கடன் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. I. ஒவ்வொரு நீதிமன்ற வலயங்களிலும் கணக்காளர், மேல் நீதிமன்ற பதிவாளர், பிராந்திய பிரதேசத்திலுள்ள வேறு நீதிமன்ற ஒன்றின் பதிவாளர் ஆகிய அலுவலர்களை உள்ளடக்கிய குழுக்களை நியமனம் செய்து அக்குழுவின் பிரேரணையின் பெயரில் நிலுவைக் கடனை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

	II. ஓய்வூதிய திணைக்களத்தினால் மரண பணிக் கொடை, ஓய்வூதிய பணிக் கொடை தயார் செய்யப்படாதிருப்பதனால் மரணப் பணிக் கொடையை விடுவித்ததுடன் கடன் நிலுவைகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் மற்றும் உரிமையாளர் இல்லாமையினால் கோரிக்கை விடுக்காத மரண பணிக் கொடையாளர்களிடமிருந்து நிலுவைக் கடனை மாத்திரம் ஓய்வூதிய திணைக்களத்தின் ஊடாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றத்தை அறிவுறுத்தல். III. கடன் பட்டோரின் நிரந்தர வசிப்பிடத்தை உறுதி செய்து கொள்ள முடியாத பட்சத்தில் பிரதேச செயலாளர் மற்றும் கிராம அலுவலர் ஊடாக வசிப்பை உறுதி செய்து கொண்டு கடன் நிலுவையை தீர்க்குமாறு கடிதம் மூலமாக அறிவிப்பதன் ஊடாக கடன் தொகையை தீர்த்துக் கொள்ளல். IV. கடன் பட்டுள்ளவர்களிடமிருந்து கடன் தொகையை அறவிட்டுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் பிணையாளர்களின் ஊடாக கடன் தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். V. சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடன் நிலுவையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல்.

	VI. நீண்டகாலமாக நிலுவையாக காணப்படுகின்ற ஆதனக் கடன் நிலுவைகளின் பிணையாக வைக்கப்பட்டுள்ள உறுதிகள் பற்றிய தகவல்களை நீதிமன்றத்தின் ஊடாக பெற்றுக் கொண்டு உரிய பிணைகளிலிருந்து கடன் நிலுவையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.
காலாவதியான வைப்புகள் தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பொது வைப்புக் கணக்கின் காலவாதியான வைப்புக்களாக காணப்படுவது நிர்மாணிப்புக்கள் சம்பந்தமான ஒப்பந்ததாரர்களிடம் தடுத்து வைக்கப்பட்ட தொகைகள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளுக்குரிய பிணை வைப்புகளாக உள்ளவையாகும். 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அமுலில் உள்ள நிர்மாணப் பணிகள் தொடர்பான தடுத்து வைக்கப்பட்ட தொகைகள் குறித்த நிர்மாணப் பணி நிறைவடையும் வரை தடுத்து வைக்கப்பட வேண்டியிருப்பதனால் அந்த வைப்புக்கள் 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும் வைப்புக் கணக்கில் வைத்திருக்க வேண்டியுள்ளது. மேலும் வெளிநாட்டு அழைப்பாணைகளுக்கான வைப்புத் தொகைகளுக்கு நீதிமன்ற உத்தரவு கிடைக்கும் வரை தடுத்து வைக்கப்பட வேண்டும். மேலும் நீதிமன்றங்களில் காணப்படுகின்ற 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலவதியான வைப்பு வழக்கு நடவடிக்கைகள் சம்பந்தமான பிணை வைப்பாக இருப்பதனால் வழக்கு நடவடிக்கைகள் நிறைவடையும் வரை அவற்றை தடுத்து வைத்திருத்தல் வேண்டும்.

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

இரண்டாம் பகுதி : 69.00	
பிரசைகள் /சேவைபெறுனர் சமவாயம் முறைப்படி தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.	பிரசைகள்/ சேவைப் பெறுநர் பிரகடனத்தை முறையாக தயார் செய்தல், அதனை அமுல்படுத்தியுள்ளமை பற்றிய கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, மனிதவள திட்டத்தை தயார் செய்தல், மனிதவள அபிவிருத்தி திட்டத்தை தயார் செய்தல், திறன் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சிரேஷ்ட அலுவலர் ஒருவரை பெயரிடுதல் போன்ற விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நீதிச் சேவைகள் ஆணைக்குழுவை விழிப்புணர்வூட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
நிறுவனத்தின் பிரசைகள் /சேவைபெறுனர் சமவாயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமானன முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	
2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய முறையாக தயார் செய்யப்பட்ட மனித வளத் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.	
தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில், 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு	

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	
ஒட்டுமொத்த பதவியணியையும் உள்ளடக்கியதாக செயலாற்றுகை உடன்படிக்கை தயார் செய்யப்பட்டு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை.	
மனிதவள அபிவிருத்தி திட்டங்களை தயார் செய்வதற்கும், திறன் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் நிறுவனத்தினுள் சிரேஷ்ட அலுவலர் ஒருவர் பெயரிடப்பட்டிருக்கவில்லை.	
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் மூலம் வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50% இற்கும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.	
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிறுவனத்தின் 2021 நிதியாண்டுக்கான கணக்குகள் பற்றி முனைப்பழியுள்ள கருத்து வெளியிடப்படவுள்ளது.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம்- 234
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**

அரச நிறுவனங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிதிகட்டுப்பாடு மற்றும் செயலாற்றுகை பற்றிய

நிகழ்நிலை கணனி முகாமைத்துவ தகவல் முறைமைமூலம் மதிப்பீடு - 2021 ஆம் நிதியாண்டு.

முதலாம் பகுதி : 84.00	
பொருட் பதிவேடு கால அடிப்படையில் பூரணப்படுத்தப்பவில்லை.	பொருட் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம் , இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை.	சம்பளம் தயார் செய்யும் முறைமையின் கடவுச் சொல்லை 03 மாதங்களுக்கு ஒரு முறை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.
உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கு ஒரு மாதத்திற்குள் பதில் வழங்கப்படுகின்றது.
நிதி ஒழுங்குவிதி 134 (3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை.	உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கு வழங்கப்படுகின்ற பதில்களின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	
அனைத்து வாகனங்களிலும் தேசிய சின்னம் வரையப்படவில்லை.	அரச இலச்சினையைக் கொண்ட (Board) பெயர்ப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
வாகனம் ஒவ்வொன்றுக்கமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை.	லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுகின்றது.
ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	நி.பி. இற்கமைய விபத்துகள் தொடர்பான விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள	எரிபொருள் தகனம் பற்றிய பரிசோதனையை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வேன்.

ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை.	
ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கப்படவில்லை.	ஒரு ஊழியரிடமிருந்தான கடன் நிலுவை மாத்திரம் காணப்படுவதுடன் அந்த கடன் நிலுவையை குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இரண்டாம் பகுதி 58.00	
கேட்கப்படுகின்ற தகவல்களை வழங்காதிருத்தல் சம்பந்தமாக முன்வைக்கப்படுகின்ற முறைப்பாடுகளை பதிதல் மற்றும் அது சம்பந்தமாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தெளிவுபடுத்துகின்ற பதிவேடுகள் பேணிவரப்படவில்லை.	தகவல்களை சமர்ப்பிப்பதற்கு ஒரு அலுவலர் நியமனம் செய்யப்பட்டிருப்பதுடன் கிடைக்கப் பெற்றிருக்கின்ற முறைப்பாடுகளை ஆவணமயப்படுத்தி அது சம்பந்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.
நிறுவனம் தனது விடயப்பரப்பிற்கிணங்க நிலைபெறுதகு நோக்கங்களை இனங்கண்டிருக்கவில்லை.	நிறுவனம் தமது விடயப் பரப்பிற்கு அமைய நிலைபேறான நோக்கங்களை இனங் கண்டுள்ளது.
அடையாளம் காணப்பட்ட நிலைபெறுதகு இலக்குகளை அடைவதற்கு அடைய வேண்டிய இலக்குகள் தீர்மானிக்கப்படவில்லை.	இனங் காணப்பட்ட நிலைபேறான நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அடைந்து கொள்ள வேண்டிய இலக்குகள் இனங் காணப்பட்டுள்ளன.
அடையாளம் காணப்பட்டுள்ள நிலையான அபிவிருத்தி நோக்குகளை செயற்படுத்துவதன் மேம்பாட்டினை மதிப்பிடுவதற்கான குறிகாட்டிகள் அமைக்கப்படவில்லை.	இனங் காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான சுட்டிகள் இனங் காணப்பட்டுள்ளன.
2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய முறையாக தயார் செய்யப்பட்ட மனித வளத் திட்டம் தயார்	2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்க அமைய முறையாக தயார் செய்யப்பட்ட மனிதவள திட்டம்

செய்யப்பட்டிருக்கவில்லை.	தயாரிக்கப்பட்டுள்ளது.
தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் , 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாத பயிற்சி வாய்ப்புகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.
ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	ஒட்டுமொத்த பதவியணியினரையும் உள்ளடக்கும் வகையில் செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக வழங்கப்பட்டடிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50 %ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	திட்டமிடப்பட்டவாறு 50% இற்கும் மேற்பட்ட மட்டத்தில் பயிற்சி வாய்ப்புகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	உயர் நீதிமன்றத்தின் பதிவாளரது நிதிக் கூற்றுக்களின் மூலம் 2021 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றத்தன் பதிவாளர் நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசோட்டக் கூற்று பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்புடையவாறு உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது.
2020.08.28 ஆம் திகதியிடப்பட்ட 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பந்தி 12.1 இன் பிரகாரம், அதன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய 03 செயல்திறன் குறிகாட்டிகள் அடையாளம் காணப்படவில்லை.	2020.08.28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 பந்திக்கு அமைய நிறுவனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பணி தெளிவுபடுத்தப்பட்டுள்ளவாறு அதன் முன்னேற்றத்தை அளவிடக்கூடிய செயலாற்றுகை சுட்டிகள் 03

	இனங் காணப்பட்டுள்ளன.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: கடன் நிவாரண சபை திணைக்களம்- 231
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி : 91.00	
2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாவது கடவுச்சொல்லை கணக்காளர் அல்லது அவரிடம் அனுமதி பெற்றுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் மட்டும் பயன்படுத்தவில்லை.	தற்போது அரச சம்பளம் தயார் செய்யும் கணினி முறைமைக்கு அமைய முதலாவது கடவுச் சொல் கணக்காளரினால் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது.
2018ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40 (4) ஆம் உப பிரிவின் பிரகாரம் 2018.08.01 ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படமை.	இந்த திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவு இல்லை என்பதுடன் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மீதி, சிறைச்சாலை அலுவல்கள், அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.
நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	
ஒதுக்க வாகனங்களுக்காக நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு	தற்போது குழும வாகனங்களுக்கு நாளாந்த பயணக் குறிப்புகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகள் கணக்காய்வு தலைமை அதிபதியிடம்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	சமர்ப்பிக்கப்படுகின்றன.
2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை.	நிறுவனத்திற்கு உரித்தான வாகனங்களின் எரிபொருள் தகனம் பற்றிய பரிசோதனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.
நி.ஒ 371 இன் பிரகாரம் , வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	பணி குறித்த இடைக்கால கட்டுநிதி பணி நிறைவடைந்தவுடன் தீர்க்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும் என்று உரிய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள். தற்போது இது அமுலில் உள்ளது.
அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்டொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள்.	2021 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக இந்த திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட போது பணியாட்டொகுதியின் அங்கீகரிக்கப்பட்ட வரையறையையும் விஞ்சி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போது பணியாட்டொகுதியினர் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டாம் பகுதி : 73.00	
மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	மனித வள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்வதற்கும், திறன் மற்றும் நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் நிறுவனத்தில் சிரேஷ்ட அலுவலர் ஒருவரை பெயரிடுமாறு உரிய நிறுவனத்திற்கு அறிவுரை வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.
திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகள் மூலமாக	தற்போது திட்டமிடப்பட்ட பயிற்சி சந்தர்ப்பங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள

வழங்கப்பட்டடிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50 %ஐ பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது.	பயிற்சி வாய்ப்புகளின் அளவு 90% ஆக வளர்ச்சியடைந்துள்ளது. 2021 ஆம் ஆண்டில் கோவிட் தொற்று காரணமாக பயிற்சி வாய்ப்புகள் முறையாக அமுல்படுத்தப்படவில்லை.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிறுவனத்தின் கணக்குகள் பற்றி கணக்காய்வு கருத்துரையாக முனைப்பொழியுள்ள கருத்துரை வழங்கப்பட்டுள்ளது.
நிதி பிரமானக் குறிப்பின் 119 இன் படி செலுத்த உத்தரவிடப்பட்ட கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படவில்லை.	இந்தத் திணைக்களத்தில் அறவிடப்பட வேண்டிய மிகைக் கட்டணங்கள் காணப்படுவதாக அவதானிப்புச் செய்யப்படுவதில்லை.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்- 233
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி : 81.00	
நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	திணைக்களத்திற்கு பதில் கடமையாற்றுவதன் அடிப்படையில் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு ஒரு அலுவலர் 2021.11.19 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டுள்ளார். எவ்வாறாயினும் குறித்த அலுவலர் 2021 ஆம் ஆண்டில்

	உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயார் செய்யத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதுடன் நி.பி. 134(2) கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு உள்ளக கணக்காய்வு அறிக்கையை தயார் செய்ய போதிய காலம் இருக்கவில்லை.
வருடாந்த பொருள் கணிப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்ட மிகைகள் , பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய விதப்புரைகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவில்லை.	2021 ஆம் ஆண்டு பொருட் கணிப்பீட்டு நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் நிலவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக தாமதமாகி மேற்கொள்ளப்பட்டது. வருடாந்த பொருட் கணிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்ட மிகை குறை பற்றிய சிபாரிசுகளும் ஏனைய சிபாரிசுகளும் உரிய கால எல்லைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
வாகனம் ஒவ்வொன்றுக்கமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை.	தற்போது லொக் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.
ஒவ்வொரு வாகன விபத்து தொடர்பிலும் நி.ஒ. 103,104,109 மற்றும் 110 இன்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	வாகன விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளும் போது இடம்பெற்றுள்ள தாமதங்களை கூடியளவு குறைத்துக் கொண்டு துரிதமாக நிறைவு செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகள் தாமதமடைவதற்கு பொலிஸ் அறிக்கை கிடைப்பதில் உள்ள தாமதம், விபத்து விசாரணைக் குழு அறிக்கைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதும் காரணமாக அமைந்துள்ளது. தற்போது சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவு மற்றும் ஆலோசனை வழங்கப்பட்டு விபத்துக்கள் இடம்பெற்றவுடன் நி.பி. 103, 104 இற்கமைய விசாரணைகளை ஆரம்பித்து அடுத்த கட்ட

	நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
2016.12.29ஆம் திகதிய 2016/30ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்களில் எரிபொருள் தகனம் பற்றிய சோதனை மேற்கொள்ளப்படாமை.	தற்போது எரிபொருள் தகனம் பற்றிய பரிசோதனையை வருடாந்தம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டிற்கு ஏற்கனவே இந்த பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.
நி.ஒ. 94 (1) இன்படி செலவு விடயமொன்றுக்கு செய்யப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டிறுதியில் எஞ்சிய ஒதுக்கீடுகளின் வரம்பினை விஞ்சாதபடி பொறுப்புக்கள் ஏற்கப்பட்டிருந்தது.	2021 ஆம் ஆண்டில் செலவுத் தலைப்புகள் சில சம்பந்தமான ஏற்பாடுகள் வரையறைகளை விஞ்சி கடப்பாடுகள் செய்துகொள்ளப்பட்டிருந்ததுடன் இது நி.பி. 94(2) இற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.
நி.ஒ 371 இன் பிரகாரம் , வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டு நிதி ஒரு மாதத்துக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை.	தற்போது பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள கட்டுநிதியை உரிய கால எல்லைக்குள் தீர்த்து வைக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என்பதுடன் குறித்த கட்டுநிதியை முறையாக தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் பகுதி : 70.00	
2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கைக்கு அமைய முறையாக தயார் செய்யப்பட்ட மனித வளத் திட்டம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.	2022/2023 ஆம் ஆண்டுகளுக்கு மனித வள அபிவிருத்தித் திட்டம் ஒன்று 2022.11.23 ஆம் திகதி தயார் செய்யப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்ட மனிதவள மேம்பாட்டுத் திட்டத்தில் , 50% க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 12 மணி நேரத்திற்கு குறையாமல் பயிற்சி வாய்ப்பை வழங்குதல் உறுதி செய்யவில்லை.	2021 ஆண்டில் நாடளாவிய ரீதியில் நிலவிய கோவிட் தொற்று நிலைமை காரணமாக நாட்டில் அமுலில் இருந்த பயணத் தடைகள் மற்றும் ஏனைய தடைகள் காரணமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளில் ஈடுபடுத்துவது மட்டுப்படுத்தப்பட்டது. 2022/2023 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைகளின் மூலம் உள்நாட்டு நிதி மூலமான பயிற்சி வாய்ப்புகள் தடுக்கப்பட்டிருந்தன. இதற்கமைய 2021 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை அலுவலர்கள் போதியளவு பயிற்சித் தேவைகளை பெற்றுக் கொடுக்க முடியாது போனதுடன் இலவசமாக பெற்றுக் கொள்ளக் கூடிய உரிய பாடநெறிகளுக்கு மாத்திரம் அலுவலர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.
ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.	தற்போது செயலாற்றுகை உடன்படிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.
மனிதவள அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேட்ட அலுவலரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	மனிதவள அபிவிருத்தித் திட்டத்தை தயார் செய்வதற்காக பணிப்பாளர் (நிருவாகம்) பெயரிடப்பட்டுள்ளார்.
நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் ஒப்புதலளிக்க மறுக்கின்ற அல்லது பாதகமான மட்டத்தில் நிலவியது.	நிறுவனத்தின் கணக்காய்வு கருத்துரை விளக்களிக்கும் மட்டத்தில் அல்லது பாதகமான மட்டத்தில் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் 2022 மே மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கைக்கு அமைய திணைக்களத்திற்கு முனைப்பழியுள்ள கணக்காய்வு கருத்துரை வெளியிடப்பட்டுள்ளது. கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படவில்லை.	
. பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகள்/ கட்டளைகள் செயல்படுத்தப்படவில்லை.	

	சிபாரிசுகளை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு உரிய அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் வெளியிடப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது சிபாரிசுகள் காணப்படவில்லை என்பதுடன் 2021 நிதியாண்டுக்கான ஒன்லைன் தகவல் முகாமைத்துவ முறைமையில் அவ்வாறான கட்டளையோ அல்லது அவ்வாறான சிபாரிசோ வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பெயர் மற்றும் தலைப்பு: சட்டவரைஞர் திணைக்களம் - 230
பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இல 290

குழு இனங்கண்டுள்ள பலவீனங்கள் / வழங்கப்பட்ட சிபாரிசு	**மேற்படி பலவீனங்களை தவிர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை**
முதலாம் பகுதி : 90.00	

உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 ஆம் ஆண்டுக்கு இந்த திணைக்களத்திற்கு எந்தவொரு உள்ளக கணக்காய்வு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை. தற்போது கிடைக்கின்ற சகல உள்ளக கணக்காய்வு வினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அளிக்க தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2018.08.01 ஆம் திகதியின் பின்னர் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்படமை. நிதி ஒழுங்குவிதி 134 (3) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படாமை. நிதி ஒழுங்குவிதி 134(2) இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்காமை.	2021 ஆம் ஆண்டில் இந்த திணைக்களத்தில் எந்தவொரு உள்ளக கணக்காய்வு அறிக்கையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை . இந்த திணைக்களத்தில் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று இல்லை என்பதனால் அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவினால் உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் தற்போது இந்த பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துக கணக்காய்வு திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்படுகின்றன.
